


இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (02.08.24) ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 382 ஊராட்சிகளுக்கு 633 கலைஞர் விளையாட்டு உபகரணங்களின் தொகுப்பை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, ஈரோடு மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர். ப. செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், ஏ.ஜி. வெங்கடாசலம், ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி. சு.நாகரத்தினம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுங்கரா, கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மீ.தங்கவேல், பாரா பாட்மிட்டன் வீரர் ரித்திக் ரகுபதி, கையுந்து பந்து வீராங்கனை திருமதி. ஜெ. மகேஸ்வரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (02.08.24) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு ரூ.10.67 கோடி மதிப்பில் புதிய தலைமை அலுவலக கட்டடம், சேலம் மாவட்டத்தில் ரூ. 20 கோடி மதிப்பில் பன்னோக்கு விளையாட்டு வளாகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, ஈரோடு மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், ஏ.ஜி.வெங்கடாச்சலம், ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி. சு.நாகரத்தினம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுங்கரா, கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மீ.தங்கவேல், பாரா பாட்மிட்டன் வீரர் ரித்திக் ரகுபதி, கையுந்து பந்து வீராங்கனை திருமதி. ஜெ.மகேஸ்வரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### திண்டுக்கல் கிழக்கு - மேற்கு மாவட்டக் கழகங்கள் சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவுப் பேரணி!

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் அர.சக்கரபாணி - இ.பெ. செந்தில்குமார் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

திண்டுக்கல், ஆக. 4-

திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழகங்கள் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் 6ஆம் ஆண்டு நினைவு நாள் பேரணி மாவட்டக் கழகத் தோழர்கள் திரளாகப் பங்கேற்குமாறு கிழக்கு - மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் அமைச்சர் அர.சக்கரபாணி, இ.பெ. செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.





இது குறித்து அவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு, திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழ்நாடு வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக் கொண்ட முத்தமிழ் அறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள், உலகே போற்றும் பன்முகப் படைப்பாளியாக, முன்னேற்ற உணர்வோடும் கலந்து, காலம் போற்றும், காவியமாக, என்றும் வரலாற்றில் நிலைத்தப் பதிவாக சமூக நீதி, மக்களின் முன்னேற்றம், சாதிப் பிரிவினைகள் அகற்றம், தீண்டாமை ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, நடுத்தர மக்களுக்கு நலத்திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிமுகம் செய்து மக்களின் மனதைக் கொள்ளை கொண்டவர்.

பன்முகச் சிறப்பு வாய்ந்த அவர் அகில இந்திய அரசியல் தலைவர்களால் கவரப்பட்டவர். பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு முறையாகத் தீர்வு காணக்கூடியவராக, எப்பேர்ப்பட்ட கடினமான சிக்கல் வாய்ந்த பிரச்சினைகளாக இருந்த போதும் அதைத் தீர்த்து வைக்கக் கூடியவராக தலைவர் கலைஞர் அவர்கள் விளங்கினார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அனைத்து முதலமைச்சர்களுக்கும், பல்வேறு கட்சித் தலைவர்களுக்கும் முன்மாதிரியாக, ரோல் மாடலாக, தலைவர் கலைஞர் அவர்கள் இருந்துள்ளார்கள்.

முத்தமிழின் முகவரியாக, புகழ்ச்சின்னமாக ஒளி வீசும் தலைவர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாளினையொட்டி 07.08.2024, புதன்கிழமை அன்று திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டங்களில் உள்ள அனைத்து மாநகரம், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள், வார்டு மற்றும் கிளைக் கழகங்கள் தோறும் அனைத்து இடங்களிலும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செய்து வீரவணக்கம் செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

### ஆகஸ்ட் 7 முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவு நாள்!

# தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அமைதி ஊர்வலம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி. கீதாஜீவன் வேண்டுகோள்!

தூத்துக்குடி, ஆக.4-

ஆகஸ்ட்-7 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6 - ஆம் ஆண்டு நினைவு தினம்: தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் அமைதி ஊர்வலம் மற்றும் மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து வார்டு, கிளைக்கழகங்கள் தோறும் மலர் அஞ்சலி செலுத்தப்படுவதாக தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் திருமதி. பி கீதாஜீவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு

தி.மு.கழகத்தை தோற்றுவித்த பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்கு பின் இந்த இயக்கத்தை கட்டிகாத்து 5 முறை தமிழக முதல்வராக இருந்து தமிழகத்தை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு சென்றவர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார்.

தன்னுடைய கடைசி காலம் வரை தமிழ், தமிழர் நலன், சமத்துவம், சமூக நீதி என்று பாடுபட்டவர். அவர் நம்மைவிட்டுச் சென்றாலும் அவர் காட்டிய வழியில் கொள்கையில் உறுதியோடு தி.மு.கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இயக்கத்தை வழி நடத்தி வருகிறார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6 வது நினைவு தினம் வருகிற ஆகஸ்ட் - 7 அன்று வருகிறது. அன்றைய தினம் காலை 7.00 மணி அளவில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தூத்துக்குடி V.V.D மெயின் ரோடு, டூவிபுரம் 5 வது தெரு - அண்ணா நகர் 7 வது தெரு சந்திப்பில் இருந்து மாவட்ட செயலாளராகிய (பி.கீதாஜீவன்) என்னுடைய தலைமையில், 4 வது இரயில்வே கேட், குறிஞ்சி நகர் வழியாக ஊர்வலமாக சென்று மாவட்ட தி.மு.க அலுவலகமான கலைஞர் அரங்கம் முன்பு அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட இருக்கிறது.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், கிளைக்கழக செயலாளர்கள், நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக தொண்டர்கள் அனைவரும் பெருந்திரளாகக் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் கிளைக் கழகங்கள், வார்டுகள் தோறும் அவரது திருவுருவப் படத்தை வைத்து அஞ்சலி செலுத்தவும், கழகத்தின் கொள்கை விளக்கப் பாடல்கள் ஒலிப்பரப்பிடவும் கேட்டுக் கொள்கிறேன். அந்தந்த பகுதிகளில் நடைபெறும் மலர் அஞ்சலி நிகழ்ச்சியில் அந்தந்த பகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் தொண்டர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர், தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் மாநில பொதுக்குழுக் கூட்டம் செட்டிநாடு வித்யாஷ்ரம் பள்ளி, ராஜா அண்ணாமலைபுரத்தில் அமைச்சர், தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் தலைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வயநாடு நிலச்சரிவில் உயிரிழந்தவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இக்கூட்டத்தில் மாநில செயலர், தொடக்கக் கல்வி இயக்குனர் நரேஷ், மாநில முதன்மை ஆணையர், மேனாள் பள்ளிக் கல்வித்துறை இயக்குனர் முனைவர் க.அறிவொளி, மாநிலத் துணை தலைவர், பள்ளிக் கல்வித்துறை இயக்குனர் கண்ணப்பன் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### அருந்ததியினர் உள் இட ஒதுக்கீடு தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு!

# இந்தியாவிற்கே வழிகாட்டக்கூடிய திராவிடமாடல் அரசுக்குக் கிடைத்துள்ள மகத்தான தீர்ப்பு!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஆக.4-

அருந்ததியினர் உள் இட ஒதுக்கீடு தொடர்பான தமிழ்நாடு அரசின் சட்டம் என்ற செல்லும் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு இந்தியாவிற்கே வழிகாட்டக்கூடிய திராவிட மாடல் அரசுக்குக் கிடைத்துள்ள மகத்தான தீர்ப்பு என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.



தினகரன்
ஆகஸ்ட் 3, 2024 சனிக்கிழமை

இந்தியாவுக்கே வழிகாட்டி

சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் வாழும் அருந்ததியின மக்களின் அவல வாழ்வை அகற்றிட கலைஞர் கருணாநிதி கடந்த 2008ம் ஆண்டில் திட்டமிட்டார். அதன் தொடர்ச்சியாக, சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் தலைமையில் 25.3.2008 அன்று குழு அமைத்தார். அந்த குழு வழங்கிய பரிந்துரையின்படி, பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கி இருப்பதால் அவர் தம் முன்னேற்றத்திற்கு சிறப்பு சலுகைகள் அளிப்பது அவசியம் எனக்கருதி, ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 18 சதவித இடஒதுக்கீட்டில் இருந்து 3 சதவீதம் அருந்ததியர்களுக்கு உள் இடஒதுக்கீடு வழங்குவதற்காக 27.11.2008 அன்று கூடிய தமிழக அமைச்சரவை முடிவு செய்தது.

அந்த முடிவின்படி, சட்டம் இயற்ற முனைந்த போது கலைஞர் கருணாநிதி உடல்நலம் குன்றி

அது வருமாறு:-

சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் வாழும் அருந்ததியின மக்களின் அவல வாழ்வை அகற்றிட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கடந்த 2008ம் ஆண்டில் திட்டமிட்டார். அதன் தொடர்ச்சியாக, சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் தலைமையில் 25.3.2008 அன்று குழு அமைத்தார். அந்த குழு வழங்கிய பரிந்துரையின்படி, பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கி இருப்பதால் அவர்தம் முன்னேற்றத்திற்கு சிறப்பு சலுகைகள் அளிப்பது அவசியம் எனக்கருதி, ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 18 சதவீத இடஒதுக்கீட்டில் இருந்து 3 சதவீதம் அருந்ததியர்களுக்கு உள் இடஒதுக்கீடு வழங்குவதற்காக 27.11.2008 அன்று கூடிய தமிழக அமைச்சரவை முடிவு செய்தது.

அந்த முடிவின்படி, சட்டம்இயற்ற முனைந்தபோது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உடல்நலம் குன்றி சென்னை தனியார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மேற்கொள்ள நேர்ந்தது. அவரது அறிவுரைப்படி, தமிழ்நாடு அரசின் அப்போதைய உள்ளாட்சி துறை அமைச்சர், இன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின், அருந்ததியினருக்கு 3 சதவிகித இடஒதுக்கீடு வழங்கும் சட்டமசோதாவை பேரவையில் 26.2.2009 அன்று அறிமுகம் செய்து நிறைவேற்றினார். 29.4.2009 அன்று இதுதொடர்பான விதிகள் உருவாக்கப்பட்டு, வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த உள்இடஒதுக்கீட்டினால் அருந்ததிய இளைஞர்கள் பெற்ற பயன்கள் அதிகம். அதாவது, 2009-2010ல் அருந்ததியின சமுதாயத்தைச் சேர்ந்த 56 மாணவ, மாணவிகள் மருத்துவ கல்லூரிகளிலும் 1,165 மாணவ, மாணவிகள் பொறியியல் கல்லூரிகளிலும் சேர்ந்து, மொத்தம் 1,221 பேர் பயன் பெற்றனர். 2010-2011ல் இந்த எண்ணிக்கை மருத்துவ கல்லூரிகளில் 87 என்றும், பொறியியல் கல்லூரிகளில் 3,414 என்றும், பல்தொழில்நுட்ப கல்லூரிகளில் 779 பேர் என்றும், கலை கல்லூரிகளில் 5,319 பேர் என்றும், மருத்துவம் சார்ந்த படிப்புகளில் 147 பேர் என்றும், பள்ளிகளில் 42,269 பேர் என்றும் மொத்தம் 52,015 ஆக உயர்ந்தது.

இந்நிலையில், இந்த 3 சதவீத உள் இடஒதுக்கீட்டை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், 2020ம் ஆண்டு தமிழ்நாடு அரசின் அருந்ததியினர் உள் ஒதுக்கீடு சட்டம் செல்லுபடியாகும் என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால், ஏற்கனவே, அதாவது 2004ம் ஆண்டிலேயே உள் இடஒதுக்கீட்டை அனுமதிக்கக் கூடாது என்று ஆந்திர மாநில வழக்கில் உச்சநீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் அமர்வு ஒரு தீர்ப்பை வழங்கியிருந்தது. அதன் காரணமாக, அருந்ததியினருக்கு 3 சதவீத உள் இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பான வழக்கை 7 நீதிபதிகள் அமர்வுக்கு உச்சநீதிமன்றம் பரிந்துரை செய்தது.

இந்த வழக்கில், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான 7 நீதிபதிகள் அமர்வு, பட்டியலின பழங்குடியினருக்கான உள் இடஒதுக்கீட்டை மாநில அரசுகள் வழங்க முடியும்; அருந்ததியினர் உள் இடஒதுக்கீடு தொடர்பான தமிழ்நாடு அரசின் சட்டம் செல்லும் என்று ஒருமித்த தீர்ப்பினை 1.8.2024 அன்று வழங்கினர்.

உச்சநீதிமன்றத்தின் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை நாடே பாராட்டுகிறது. தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ”ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்கான சமூக நீதியை நிலைநாட்டும் திராவிட மாடல் பயணத்திற்கான மற்றுமொரு அங்கீகாரமாக உச்சநீதிமன்ற தீர்ப்பு அமைந்திருக்கிறது. இந்த தீர்ப்பு இந்தியாவிற்கே வழிகாட்டக்கூடிய திராவிட மாடல் அரசின் ஓர் உன்னதமான திட்டத்திற்கு கிடைத்துள்ள மகத்தான தீர்ப்பு. இது என்றும் நினைவுகூரத்தக்கது.” எனக் கூறியுள்ளார். இதுதான் உண்மை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஒழுங்கு நடவடிக்கை!

## கழகத்திலிருந்து நிரந்தரமாக நீக்கம்

## தலைமைக் கழக அறிவிப்பு

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சுந்தரபாண்டியன் - கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அவர் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் நிரந்தரமாக நீக்கி (Dismiss) வைக்கப்படுகிறார். இவரோடு கழகத்தினர் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 02.08.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# ஆகஸ்ட் 12,13ல் உலக தமிழ்மொழி வளர்ச்சி மாநாடு!

## சென்னை வளர்ச்சிக் கழகத் தலைவர் வி.ஆர்.எஸ்.சம்பத் தலைமையில் நடைபெறுகிறது!

சென்னை, ஆக. 4-

வி.ஜி.பி. உலக தமிழ் சங்க தலைவர் வி.ஜி. சந்தோஷம், சென்னை வளர்ச்சி கழகத்தின் தலைவர் விஆர் எஸ்.சம்பத், சென்னை அண்ணா பல்கலைக்கழக பொறியியல் தொழில்நுட்ப தமிழ் வளர்ச்சி மைய இயக்குனர் உமாமகேஸ்வரி ஆகியோர் சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கூறியது:

சென்னை வளர்ச்சி கழகத்தின் பன்னாட்டு தமிழ் மொழி மற்றும் பண்பாட்டு கழகமும், அண்ணா பல்கலைக்கழகத்தின் பொறியியல் தொழில்நுட்ப தமிழ் வளர்ச்சி மையமும் இணைந்து, 2ம் உலக தமிழ்மொழி வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி மாநாட்டை, வரும் 12 மற்றும் 13ம் தேதிகளில் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் நடத்துகின்றன. மாநாட்டுக்கு அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் வேல்ராஜ் தலைமை தாங்குகிறார்.

அமைச்சர்கள் பொன்முடி, எஸ்.ரகுபதி, மு.பெ.சாமிநாதன், மா. சுப்பிரமணியன், செஞ்சி மஸ்தான், அன்பில் மகேஷ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர். வேலூர் விஐடி வேந்தர் ஜி.விஸ் வநாதன், கயானா நாட்டுக்கான முன்னாள் இந்திய தூதர் மகாலிங்கம், தஞ்சை தமிழ் பல்கலைக்கழக துணைவேந்தர் திருவள்ளுவன் உள்ளிட்ட தமிழறிஞர்கள், கல்வியாளர்களும் பங்கேற்கின்றனர். 100க்கும் அதிகமான ஆய்வு கட்டுரைகள் வந்துள்ளன. மாநாட்டில், தமிழ் வளர்ச்சிக்கு பாடுபட்ட தமிழறிஞர் ஒருவருக்கு ‘வளர்தமிழ் அறிஞர் விருது’, தமிழ் மொழி வளர்ச்சிக்காக பாடுபடும் 3 உள்நாட்டு தமிழறிஞர்கள், 3 வெளிநாட்டு தமிழறிஞர்கள் மற்றும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் செயல்படும் 6 தமிழ் அமைப்புகள் ஆகியோருக்கு வளர் தமிழ் மாமணி விருதும் வழங்கப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா நூலகம் திறப்பு விழா மாநகர் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மா. ராம்பிரசாத் தலைமையில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் இன்பா ஏ.என்.ரகு முன்னிலையில் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் கழக நிர்வாகிகள் வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, மூவேந்திரன், இளைஞர் அணி சௌந்தர்ராஜன் மற்றும் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், கழகத்தினர்கள் கலந்து கொண்டனர்.